★ பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு
The EELANADU

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8948/78

மலர்: 21 ஆனி: 30 ஷஃபா: 18 இதழ்: 151
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 14-7-79

## ரூ. 1 லட்சம் கடத்தல் சேலைகளுடன் கார் புரண்டது!

### சுங்கப் பகுதியினர் துரத்தியபோது சம்பவம் இடம்பெற்றது

[யாழ்ப்பாணம்]

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கடத்திவந்ததாகக் கருதப்படும் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான புடவைகள் அடங்கிய பொதிகளுடன் சென்ற காரை யாழ் சுங்கப்பகுதியினர் துரத்திச்சென்ற போது கார் புரண்டதை அடுத்து புடவைகள் மீட்கப்பட்டதுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். காரும் கைப்பற்றப்பட்டது.

இச்சம்பவம் யாழ் ஒட்டுமடம் சந்திக்கு அண்மையில் நேற்றுக்காலை இடம்பெற்றது.

யாழ் சுங்கப்பகுதியினருக்கு கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து, உதவிச் சுங்க அதிகாரி திரு. ஆர். சோமசுந்தரம் தலைமையில் உதவியாளர்கள், திருவாளர்கள் கே. ரட்ணராஜா. பயஸ் பியசேனநிகால், ஜெயரட்ணம், டிலால் ஆகியோர் குறிப்பிட்ட காரைத் தொடர்ந்து

[8ம் பக்கம் பார்க்க]

# யாழ். மாவட்ட அமைச்சராக விஜயக்கோன் நியமனம்

## முல்லைத்தீவுக்கு மன்சூர் மாற்றம்

(கொழும்பு)

**யாழ். மாவட்ட அமைச்சராக தம்பதேனிய எம். பி. திரு. உக்குபண்டா விஜயக்கோன் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார்.**

முன்னர் யாழ் மாவட்ட அமைச்சராக இருந்த ஜனாப் ஏ ஆர் எம் மன்சூர் முல்லைத்தீவு மாவட்ட அமைச்சராக நியமிக்கப்பட்டு, இதுவரை முல்லைத்தீவு மாவட்ட அமைச்சராக இருந்த ஜனாப் மன்சூர் நேற்றுக் காலை தமது பதவியை ராஜினாமாச் செய்தபின்னர் யாழ் மாவட்ட அமைச்சராக ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணஞ்செய்து பதவி யேற்றுக்கொண்டார்.

(8-ம் பக்கம் பார்க்க)

யாழ். நகரில்

## 'செஷயர்' இல்லம் அவசியம் வேண்டும்

### புனருத்தாரண கொடித்தினத்தில் யாழ். மாவட்ட நீதிபதி

[யாழ்ப்பாணம்]

" வலது குறைந்தோருக்கான 'செஷயர்' இல்லம் இலங்கையில் கொழும்பிலும் நீர்கொழும்பிலும்தான் உண்டு. யாழ் நகரிலும் 'செஷயர்' இல்லமொன்று அமைக்கப்படுமானல் அது இலங்கையின் மூன்றாவது இல்லமாக இருக்கும் யாழ் நகரில் வலதுகுறைந்தோருக்கான 'செஷயர்' இல்லம் அவசியம் அமைக்கப்படவேண்டும். இதற்காக யாழ் லயன்ஸ் கழக அங்கத்தவர்கள் மிகவும் பாராட்டுக்குரியவர்கள் ''

இவ்வாறு யாழ் மாவட்ட நீதிபதி திரு ஜி ஜே ஆசீர்வாதம் நேற்றுக்காலை யாழ் சட்டநூலகத்தில் வலதுகுறைந்தோருக்கான புனருத்தாரண கொடித்தினத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

யாழ் லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் எஸ் சபாரத்தினம் பேசுகையில், வலதுகுறைந்தோர் தற்போது யாழ் நகரில் பாதையோரங்களில் வசிப்பதாகவும், இவர்களுக்கு ஓர் வசிப்பிடம் இல்லாதது பெரும் குறை என்றும் கூறி 'செஷயர்' இல்லம் அமைக்கப்படுவதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

"வலதுகுறைந்தோர் வாழ்வு மலர பொதுமக்கள் ஆதரவை தாராளமாக உதவவேண்டும்'' என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

யாழ் சட்டக்கவுன்சில் தலைவர் திரு எஸ் ஆர் கனகநாயகம் நன்றிகூறினர்.

## இளைஞர்கள் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் நேற்று முன்தினம் நடந்த பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கொள்ளை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இளைஞர்களிடமிருந்து பொலிசார் ஒரு கைத்துப்பாக்கியையும் கைப்பற்றியுள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு சுகுணரத்தினம் தலைமையில் சென்ற கோஷ்டியினர் இளைஞர்களைக் கைது செய்தனர்.

கோண்டாவில், கொக்குவில் பகுதிகளில் இரு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் கிளைகளில் இக்கொள்ளை நடைபெற்றது.

அரச, கூட்டுத்தாபன, தனியார்துறை

## அலுவலக நேரம் ஆகஸ்ட் முதல் மாற்றம்

[யாழ்ப்பாணம்]

அரசாங்க, தனியார்துறை அலுவலக நேரங்களில் மாற்றம் செய்யப்பட உள்ளது. போக்குவரத்துக் கஷ்டங்களைப் போக்கவே அரசு இந்நடவடிக்கையை அமுலுக்குக் கொண்டுவர யோசித்துள்ளது

அடுத்த மாதம் 1ம் திகதியிலிருந்து இத்திட்டம் அமுலுக்கு கொண்டு வரப்படவுள்ளது. புதிய திட்டத்தின்படி காலை 8-30 மணி முதல் மாலை 4-30 மணிவரை அரசாங்க காரியாலயங்கள் அலுவல நேரமாக இருக்கும்.

தனியார்துறையினருக்கும் கூட்டுத்தாபன ஊழியருக்கும் காலை 9 மணி முதல் மாலை 5-15 மணிவரையே அலுவலக நேரமாகும்.

பாடசாலை நேரங்களில் மாற்றம் இருக்காது. [இ]

## கூட்டணி நடவடிக்கைக் குழு இன்று கூடுகிறது

[மட்டக்களப்பு]

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைக்குழு இன்று காலை கல்குடாத் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி அமைப்பாளர் திரு. எஸ். சம்பந்தமூர்த்தியின் இல்லத்தில் கூடவுள்ளது. [இ]

## சரத் அமுனுகம தகுதி வாய்ந்த அதிகாரி

[கொழும்பு]

யாழ். மாவட்டம் கொழும்பு விமான நிலையங்களான, இரத்மலானை பிரதேசங்களில் அவசரகாலச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டதை அடுத்து பத்திரிகைச் செய்திகளுக்கு தணிக்கை விதிக்கப்பட்டுள்ளது.

தகுதிவாய்ந்த அதிகாரியாக ராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு. சரத் அமுனுகம நியமிக்கப்பட்டுள்ளார்.

## திருமணம்

மணமகன்- திருவளர் செல்வன்
ம. முருகதாஸ்
(உரிமையாளர் தாசன்மில், வவனியா)

மணமகள்- திருவளர் செல்வி
சுமதி திருநாவுக்கரசு

காலம்- 15-7-79 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3-58 முதல் 6-00 மணி வரையுள்ள மிதுன இலக்கின சுபமுகூர்த்தம்.

இடம்- கலட்டி அம்மன்கோயில் யாழ்ப்பாணம்.

வரவேற்பு- 15-7-79 பிற்பகல் 4 மணி முதல் 6மணி வரை (மணமகன் இல்லம்) நண்பர்கள். அன்பர்கள், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்)

திரு. திருமதி
ஏ.திருநாவுக்கரசு (கடற்றொழில் பரிசோதகர்) 60, சேர்.பீ. இராமநாதன்வீதி, யாழ்ப்பாணம்,

நா.க. மயில்வாகனமும், (பிரபல வர்த்தகர், கொழும்பு, வவனியா. யாழ்ப்பாணம்) பாரியாரும், 808/4, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

5036

230 லக்ஸ்பிறே பக்கட் பறிமுதல்

## விலை கூட்டி விற்றவருக்கு ரூ. 1,000 அபராதம்

[யாழ்ப்பாணம்]

கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க கூடிய விலைக்கு லக்ஸ்பிறே பால்மாவை விற்ற ஒரு வர்த்தகருக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

யாழ் பழைய மார்க்கட்டில் உள்ள கடை ஒன்றில் ஆறு ரூபா ஐம்பதுசதத்திற்கு விற்க வேண்டிய ஒரு றாத்தல் லக்ஸ்பிறே பால்மாவை ஒன்பது ரூபாவுக்கு விற்ற வர்த்தகர் ஒருவரை யாழ் போக்குவரத்துப்பகுதி பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர் சிசிரகுமார, கான்ஸ்டபிள்கள் ரத்தினசிறி, ரணவீர, அன்வர் ஆகியோர் கைது செய்தனர்.

மேற்படி பொலிசார் பழைய மார்க்கட்டில் உள்ள கடைஒன்றிற்குச் சென்று அடையாளம் இடப்பட்ட பத்துரூபா நோட்டு ஒன்றை ஒருவர்மூலம் கொடுத்து குழந்தைகளின் பால்மாவான லக்ஸ்பிறே ஒருறாத்தல் வாங்கியதாகவும், ஆறுரூபா ஐம்பது சதம் விற்கவேண்டிய பால்மாவை இரண்டுரூபா ஐம்பது சதம் கூட்டி ஒன்பது ரூபாவுக்கு விற்று ஒரு ரூபா மிகுதிப்பணத்தையும் கடைக்காரர் வழங்கியபோது பொலிசார் திடீரெனக் கடையை முற்றுகையிட்டு அடையாளம் இடப்பட்ட பத்துரூபா நோட்டையும் அங்கிருந்த இருநூற்றிமுப்பது லக்ஸ்பிறே பைக்கட்டுகளையும் கைப்பற்றி கடையின் உரிமையாளரையும் கைதுசெய்தனர்.

கடைஉரிமையாளரை யாழ் நீதிபதி திரு விமல் திஸநாயக்கா முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது நீதிபதி சந்தேகநபருக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். பால்மா விலைக்கட்டுப்பாட்டதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. (கொ)

## வரி விளம்பரம்

### தேவை

வீட்டுடன் அல்லது வீடு கட்டக்கூடிய 3 அல்லது கூடிய பரப்பு விஸ்திரணமுடைய யாழ் நகர சுற்று—லில் அமைந்துள்ள காணி தேவை. நல்லூர், திருநெல்வேலிப் பகுதி விரும்பத்தக்கது. பணம் உடனடியாகச் செலுத்தப்படும். கடிதம் மூலம் அல்லது நேரடியாக தொடர்பு கொள்ளவும். ச. தனபாலசிங்கம், (டாக்டர் சம்பந்தர் கிளினிக் அருகாமையில்) 308, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தரகர்கள் வேண்டாம். 3010

யாழ்நகரில் மூன்று மைல் சுற்றுடலில் கராஜ், மின்சார, தண்ணீர் வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. முற்பணம் கொடுக்கப்படும். கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். இல: 8, பி. ஏ தம்பி ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 3039

### விற்பனைக்கு

நீர்வேலி, அச்செழுவில் 2½ பரப்பு காணி (புலம்) விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: சோ. முத்துக்குமாரு, அச்செழு, நீர்வேலி 3043

நல்ல நிலையில் உள்ள 1 ஸ்ரீ 3000 தொடர் இலக்கமுடைய A 50 கார் உடனடியாக விற்பனைக்குண்டு விபரங்களுக்கு:- திருமதி தனபாலசிங்கம், உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். 3024

### பயிற்சி

வெளிநாடுகளில் தொழில்கள் பெறுவதற்கு நவீன முறையில் பயிற்சிகள் வெல்டிங் (Electric Arc & GAS) இலெக்ரிக் வயறிங்) ரேடியோ (Transistor) Building Tiech nology P. M. G. Certificate முதலிய பயிற்சிகளுக்கு National Institutes, 57, பாசிச்சேரல் வீதி, யாழ்ப்பாணம். 2990

## வேலணை

## ம ம. வித்தியாலயம்

## பெயர்மாற்றம்

]வேலணை]

வேலணை மத்திய மகாவித்தியாலயம், சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயமாகப் பெயர் மாற்றப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறைத் தொகுதியின் ஒரேயொரு மத்திய மகா வித்தியாலயமான இதன் பெயர் மாற்றப்பட்டுள்ளதற்கான சுற்றுநிருபம் கல்லூரி அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளதாம்.

முன்னைய சட்டசபையின் சபாநாயகரும் வேலணையைச் சேர்ந்தவருமான காலஞ்சென்ற சேர் வைத்திலிங்கம் துரைசுவாமியின் ஞாபகார்த்தமாகவே இப்பெயர் மாற்றப்பட்டுள்ளது.

சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் திரு. யோகேந்திரா துரைசுவாமியின் தந்தையாவார். [கு]

# இன்றைய பலன்

ஆனிமாதம் 30-ம் திகதி

(சனிக்கிழமை)

(14-7-1979)

**மேடம்:** குடும்பத்தில் குதூகல நிகழ்ச்சிகள் இடம் பெறும், வெளியிடத்திலிருந்து மகிழ்ச்சிகரமான செய்தியொன்று கிடைக்கலாம், பண வரவுக்கும் இடமுண்டு, உடல் நலத்திலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றமுண்டு.

**இடபம்:** உடல்நலம் சிறிது பாதிக்கப்படும். வைத்திய வழிகளில் பணம் செலவாகும். சகோதரவழியால் சஞ்சலத்துக்கு இடமுண்டு. எண்ணிய கருமத்தில் தடை ஏற்படும். ஓய்வு விரும்பத்தக்கது.

**மிதுனம்:** அன்னையின் அன்பு தாராளமாகக் கிடைக்கும், செய்காரியங்களில் தனிப்புகழ் பரவும், முயற்சியால் முன்னேற்றத்துக்கும் இடமுண்டு, கல்விப்பணி செல்வாக்கை வளர்க்கும்.

**கடகம்:** உள்ளத்தில் உவகை துள்ளும். நண்பர்கள் உங்களை உற்சாகமாக வரவேற்பார்கள், முதியவர் ஒருவர் முன்னேற்றத்துக்கு வழி வழிகாட்டுவார். தேர்சிந்தும் நிகழ்ச்சிகள் தடைபெறுவதுடன் தேடியது கிடைக்கும். வெற்றித் தினம்.

**சிங்கம்:** திகைக்கவைக்கும் திருப்பங்கள் ஏற்படும் சிலர் புனைந்துரைகளால் வேதனைப்படுவார்கள். சிறிய விபத்துக்கு இடமேற்படுமாகையால் போக்கு வரத்தைத் தவிர்த்துக் கொள்ளவும்.

**கன்னி:** கற்கண்டுபோல் இனிக்கும் வாழ்க்கை. காதல் விவகாரங்களுக்கு இடம் உண்டு. சாஸ்திர வழியின் மூலம் கனதனம் சேரக்கூடும்.

**துலாம்:** பணத்தைக் கொடுத்து பகையை சம்பாதித்துக் கொள்ளுவீர்கள். தொழில்துறையிலும் சோர்வு தென்படுகின்றது. நண்பர்கள் மூலம் புதிய தொல்லைகள் தோன்றக்கூடும். நிதானபுத்தியுடன் நடக்கவும்.

**விருச்சிகம்:** பெரியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும் தெய்வத்தின் அருளும் உண்டு இலட்சியப் பாதையில் புதிய முன்னேற்றம் காணப்படும்.

**தனுசு:** ஒளிபரப்பும் வாழ்க்கை உறவினர் மத்தியில் ஒற்றுமை மலரும். எதிர்பார்த்ததைவிட அதிகம் கிடைக்கலாம். [illegible] தினம்.

**மகரம்:** உண்மைவழி நின்று உரிமை [illegible]. மேலதிகாரிகளின் நம்பிக்கை உம்மீது பதியும், எதிர்பாராத அதிர்ஷ்ட இலாபத்துக்கும் இடமுண்டு. குடும்பத்திலும் குதூகலம் நிலவும்.

**கும்பம்:** எவ்விடயத்திலும் நன்றாக ஆலோசித்த பின்பே முடிவெடுக்கவும். ஆணவப்போக்கு மற்றவர்களின் வெறுப்பைத் [illegible] தரும். மாமன் கூறுவார் விடயத்தில முன் எச்சரிக்கையுடன் இருக்கவும்.

**மீனம்:** இனப் பூசலின் மூலம் இதயபாரம் ஏற்படும். திடீர் முடிவுக்கு வருமாறு நிர்ப்பந்திக்கப் படுவீர்கள். எதையும் தாங்கும் இதயத்துடன் செயலாற்றின் நிலைமையைச் சமாளிக்க முடியும். சுமாரான தினம்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## வாகனப் போக்குவரத்து

## அறிவித்தல்

### 1979ல் நடைபெறும் நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த உற்சவவிழா

மேற்படி விழாவின் பொருட்டாக 28-07-79 தொடக்கம் 24-08-79 வரை உட்பட்ட நாட்களில் கீழ்க்கண்ட வீதிகள் சகலவிதவாகனப்போக்குவரத்துக்களுக்கும் மூடப்பட்டிருக்கும்.

1. பருத்தித்துறை வீதியில் அரசடி சந்திக்கும் இரண்டாவது மைல் கல்லுக்கும் இடையிலுள்ள பகுதி.
2. கோவில் வீதியில் பண்டாரக்குளம் ஒழுங்கைக்கும் சோமசுந்தரம் ஒழுங்கைக்கும் இடையில் உள்ள பகுதி.
3. செட்டித்தெருவில் பருத்தித்துறை வீதிக்கும் செட்டு ஒழுங்கைக்கும் இடையில் உள்ள பகுதி.

### குறிப்பு:

வாகனப்போக்குவரத்து மூடப்பட்டிருக்கும் எல்லைக்கு வசிப்பவர்களுள் தங்கள் சொந்த வாகனங்களை உபயோகிப்பவர்களுக்கும், அரசாங்க கடமையின் நிமித்தம் வாகனங்களில் செல்லவேண்டிய உத்தியோகத்தர்களுக்கும் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு அண்மையில் நிறுவப்பட்டிருக்கும் தற்காலிக பொலிஸ் நிலையத்தில் 28-07-79 தொடக்கம் விசேஷ போக்குவரத்து அனுமதிச் சீட்டுக்கள் வழங்கப்படும்.

### வாகனங்கள் பிரிந்து செல்லல்

வாகனப் போக்கு வரத்துக்களின் சாரதிகள் கீழ்க்காணும் பாதைகளில் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

1. யாழ்ப்பாணத்தில் இருந்து கோப்பாய் நோக்கிப் போகும்பொழுது அல்லது எதிர்த்திசையில் நாவலர் வீதி, நல்லூர் குறுக்கு வீதி முதலியவற்றால் செல்லுதல் வேண்டும்.
2. அரசடி வீதி வழியாக கோப்பாய் நோக்கிப் போகும்போது அல்லது எதிர்த் திசையில் வைமன்வீதி, நாவலர் வீதி, நல்லூர் குறுக்குத்தெரு முதலியவற்றால் செல்லுதல் வேண்டும் வடக்கில் இருந்து தெற்கு வரை வைமன்வீதி ஒருவழிப்பாதையாக அமையும். அத்துடன் அரசடி வீதி மேற்கில் இருந்து கிழக்கு வரை (பலாலி வீதியில் இருந்து பருத்தித்துறை வீதி வரை) ஒரு வழிப்பாதையாக அமையும்.

### வாகனங்களை நிற்பாட்டி வைத்தல்

வழிபடுவோரின் வசதியை உத்தேசித்து வாகனங்களை நிற்பாட்டி வைப்பதற்காக 4 இடங்கள் ஒதுக்கி வைக்கப்படும். இந்நான்கு இடங்களையும் நன்கு உபயோகிக்குமாறு சாரதிகள் அனைவரும் வேண்டப்படுகின்றனர்.

### மேற்படி இடங்களாவன

1. அரசடி வீதி வழியாக கந்தசுவாமி கோவிலுக்கு வரும் வாகனங்களை அம்மன் கோவில் மைதானத்தில் நிற்பாட்டலாம்.
2. தென்பகுதியில் இருந்து கோவிலுக்கு வரும் வாகனங்களை கைலாசபிள்ளையார் கோவில் மைதானத்தில் நிற்பாட்டலாம்.
3. கோப்பாய்த்திசையில் இருந்துவரும் வாகனங்களை முத்திரைச்சந்தை மைதானத்தில் நிற்பாட்டலாம்.
4. பலாலிரோட் /திருநெல்வேலி வழியாக கோவிலுக்கு வரும் வாகனங்களை திருநெல்வேலி சிவன்கோவில் வீதியில் நிற்பாட்டலாம்.

P. H. M. A. ஹேரத்,
உதவி பொலிஸ் அத்தியட்சகர்,
யாழ்ப்பாணம் (1)

பொலிஸ் அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
10-07-79. 3044

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
கந்தரோடை, சுன்னாகம்.

### பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின்

### அங்குரார்ப்பணக் கூட்டம்

காலம்: 21-07-79 சனிக்கிழமை காலை 10-30மணி
இடம்: கல்லூரி மண்டபம்

மேற்படி கூட்டத்துக்கு பெற்றோர்கள், பழைய மாணவர்கள், பாடசாலையின் நலன்விரும்புவோர் அனைவரும் வருகை தந்து ஒத்துழைப்பு நல்குக.

சி. தியாகராசா,
அதிபர்.

சுன்னாகம்,
6-7-79. 3031

கட்டைவேலி-
நெல்லியடி
ப. நோ கூ. சங்கம்

## வெற்றிடம்

### 11-ம் தர சில்லறைப் பண்டசாலை மேற்பார்வையாளர்

மேற்குறிப்பிட்ட பதவி சம்பந்தமாக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது.

வதிப்பிடத் தகைமைகள்: குறைந்தது 2 வருடமாவது அந்த மாவட்ட எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

வயது: 23க்கும் — 50க்கும் இடைப்பட்டவராக இருக்க வேண்டும்.

வேதனம்: ரூபா 250 — 390 / 8×10, 10×6

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி:- பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்களை 30-7-79ந் திகதிக்குமுன் அனுப்புதல் வேண்டும்

தேவையான தராதரங்கள் மற்றும் தகைமைகள் பற்றிய விளக்கங்கள் யாவையும் பெறுவதற்காக கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதி மூலமோ அன்றேல் நேரடியாக வந்தோ பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெறவேண்டின் முத்திரையொட்டப்பட்ட சொந்த முகவரியிடப்பட்ட கடிதஉறை அனுப்பப்படவேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்

விண்ணப்பப் பத்திரங்களை சங்கத் தலைமைக்காரியாலயத்தில் ரூ. 1-00 செலுத்திப்பெற்றுக்கொள்ளலாம்.


தலைவர்
கட்டைவேலி-நெல்லியடி
ப நோ. கூ. சங்கம்,
கரவெட்டி.
4-7-79. 3017


# விவசாயிகளே!

உங்களுக்குத் தேவையான விவசாய உபகரணங்கள் எதுவானாலும்

- நீர் இறைக்கும் இயந்திரங்கள்
- தெளிகருவிகள்
- உதிரிப்பாகங்கள்
- அஸ்பெஸ்ரஸ் குழாய்கள்
- மண்வெட்டி, அலவாங்கு

ஆகிய மற்றும் உபகரணங்கள் எங்களிடம் கிடைக்கும்.



விவசாய உபகரணங்களை நினைக்கும் பொழுது எங்களை நினையுங்கள்

AGROS அக்ரோஸ் லிமிட்டெட்

56, கந்தப்பசேகரம் வீதி யாழ்ப்பாணம்
(புதிய நிர்வாக அலுவலகம்-கெதீசல்ல கொழும்பு)

## மக்கள் கருத்து

### தமிழர் பிரச்னையை அரசு தீர்க்கவேண்டும்

எனக்கு ஒரு மொட்டைக் கடிதம் வந்துள்ளது அதில் என்னைப்பற்றித் தவறான விளக்கம் எனக்கும் அரசாங்கத்திற்கும் ஒருவித தொடர்பும் இல்லை நான் சோஷலிஸவாதி. வடபகுதியின் பொருளாதார வளர்ச்சியை விரும்புபவன். யார் பிழைவிட்டாலும் கண்டிப்பவன். அரசியலில் தூய வழியைப்பின்பற்றுபவன். அரசாங்கம் தமிழ் மக்கள் பிரச்னைகளைத் தீர்த்துவைக்க வேண்டும். இதுவே என் கொள்கை. இளைஞன் ஒருவர் பிழையாக எண்ணியதையிட்டு மனம் வருந்துகிறேன்.

ஆ தியாகராசா
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்.

0 0 0

### எண்சோதிடமும் தமிழ் ஈழமும்

11-7-79 'ஈழநாடு' இதழில் மக்கள் கருத்துப் பகுதியில், 'தமிழ் ஈழம் பற்றி எண் சோதிடம் என்ன சொல்கிறது.' என்ற தலையங்கத்தில், திரு செல்லத்துரை தீட்டியிருக்கும் கட்டுரையில் சில தவறுகள் அவரின் கணக்கில் ஏற்பட்டுள்ளது அதனால் அவர் தவறான அபிப்பிராயத்தை வெளியிட்டுள்ளார்.

அவர் தமது கணிப்பில் சிறிலங்கா என்ற பெயருக்கும். ஈழம் என்ற பெயருக்கும் எண் ஒன்பதைக் குறிப்பது என்று எழுதியுள்ளார். ஆனால் சிறிலங்கா என்ற பெயருக்கு

3121 31521
SIRI LANKA =7412=19 =1

ஈழம் என்ற பெயருக்கு

55314
EELAM =18=9 இலங்காவின் எண் 1 ஈழத்தின் எண் 9 இத்தவறை திரு செல்லத்துரை செய்துள்ளார். ஜனாதிபதியினதும் எதிர்க்கட்சித் தலைவரினதும் ஆயுள் எண்ணும் விதி எண்ணும் சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறிலங்காவின் விதி எண் 1. ஜனாதிபதியின் விதி எண் 6. இவ்விரண்டும் முறையே சூரியனாலும் சுக்கிரனாலும் ஆளப்படுபவை. அவ்விரு கிரகங்களும் ஒன்றுக்கொன்று பகையானவை ஈழத்தின் எண் 9. எதிர்க்கட்சித் தலைவரின் விதி எண் 8. ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் கோருவது ஈழமல்ல, அவர் கோருவது தமிழ் ஈழமே. தமிழ் ஈழத்தின் எண் 5+8=13=4 தமிழ் ஈழத்தின் எண் 4. யுரேனஸ் கிரகத்தினால் ஆளப்படும் எண் 4. வருணன், சனியின் நண்பன் எண் எட்டும் எண் நாலும் நட்பான எண்கள்

அதுவுமின்றி 1979ம் ஆண்டின் கூட்டெண் 8 தமிழ்த் தலைவரின் பிறப்பெண் 8 விதி எண் 8. இந்த ஆண்டின் எண்ணும் 8 ஆகவே வருகிற எட்டாவது மாதம் தமிழ் ஈழம் அமைப்பதற்குத் திறவுகோலாக அமையும். அத்துடன் அமிர்தலிங்கத்தினாலேயே தமிழ் ஈழம் 1980 மார்ச் மாசத்தில் பிரகடனப்படுத்தப்படும்.

திரு செல்லத்துரை தாம் விட்ட தவறை திருத்த வேண்டும்.

வ. ஆறுமுகம்
பண்ணாகம் தெற்கு
சுழிபுரம்

### கட்டிடவேலை பூர்த்தி

[நெல்லியடி]

தொகுதிக்குப் பத்துவீடுகள் அமைக்கும் அரசாங்கத்திட்டத்தின்கீழ் உடுப்பிட்டித் தொகுதியில் அமைக்கப்படுவரும் 10 வீடுகளின் கட்டிட வேலைகள் பூர்த்தி அடைந்துள்ளன. இப்பத்து வீடுகளும், கொற்றாவத்தை என்னும் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

## வீதிப்போக்குவரத்து போதனை வகுப்புகள்

[யாழ்ப்பாணம்]

பாடசாலை மாணவர்களுக்கும் பொதுமக்களுக்குமான வீதிப் போக்குவரத்து போதனை வகுப்புக்கள் வடபகுதியில் இம்மாதம் 16ம் திகதி முதல் 29ம் தேதிவரை நடைபெறவிருக்கிறது.

கொழும்பு வீதிப் போக்குவரத்து போதனைப்பிரிவினர் பொலிசாருக்கும் பொதுமக்களுக்குமிடையில் நல்லெண்ணத்தை உருவாக்கும் பொருட்டு இதனை செய்ய முன்வந்துள்ளனர்.

இம்மாதம் 16ம் திகதி காலை 9 மணிக்கு, யாழ் மத்தியகல்லூரி மைதானத்தில் யாழ் மத்தியகல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, யாழ் கன்வென்ட், சிங்கள மகாவித்தியாலய மாணவ மாணவிகளுக்கு போதனைவகுப்பு நடாத்தப்படும்.

இம்மாதம் 17ம் திகதி சுண்டிக்குளி மகளிர்கல்லூரி மைதானத்தில், சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, சென் ஜோன்ஸ் கல்லூரி, பற்றிக்ஸ் கல்லூரி, புனிதஜேம்ஸ் பாடசாலை, செமமேரிஸ்பாடசாலை மாணவ மாணவிகளுக்கும்,

18ம் தேதி யாழ் இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில், இந்து மகளிர் கல்லூரி, கனகரெத்தினம் மகாவித்தியாலயம், ஸ்ரீபார்வதி வித்தியாசாலை மாணவ, மாணவிகளுக்கும்;

19ம் தேதி யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் யாழ் இந்துக் கல்லூரி வைத்தீஸ்வர வித்தியாலயம், நாவலர் வித்தியாசாலை, சன்மார்க்க மகாவித்தியாலய மாணவ, மாணவிகளுக்கும்.

20ம் தேதி யாழ் ஒஸ்மானியாகல்லூரி மைதானத்தில், ஒஸ்மானியாக் கல்லூரி முஸ்லிம் கல்லூரி, காதிஜா மகளிர் கல்லூரி மாணவ மாணவிகளுக்கும்

21ம் தேதி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் கொக்குவில் மகாவித்தியாலயம் இம்மாதம் 22ம் தேதி மானிப்பாய் இந்துக்கல்லூரியிலும் நடைபெறும் 23-ம் தேதி ஊர்காவற்றுறை, 24ம் தேதி பருத்தித்துறை, 25ம் தேதி சாவகச்சேரி, 26ம்தேதி இ போ ச டிப்போ கோண்டாவில், 27ம் தேதி பளை, 28ம் தேதி காங்கேசன்துறை; 29ம் தேதி பொதுமக்களுக்கு யாழ் துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறும்

போதனைவகுப்பு நடைபெறும இடங்கள் அந்தந்தப் பகுதி பொலிஸ் இன்ஸ்பெக்டரினால் தீர்மானிக்கப்படும்

யாழ். பொலிஸ் அதிபர் வியோ பெரேரா, உதவி பொலிஸ் அதிபர் ஹேரத், போக்குவரத்துப் பகுதிப் பொறுப்பதிகாரி என் சேனதிராசா ஆகியோருடன் கொழும்பிலிருந்து வரும் உயர் பொலிஸ் அதிகாரிகளும் மேற்படி இடங்களில் போதனை வகுப்புகளை நடாத்தவுள்ளனர்.

பல போதனை வகுப்புக்களை நடத்தும் பொலிஸார் மாலையில் வீதியில் நின்று போக்குவரத்தைக் கவனிப்பதுடன் சட்டவிரோதமாக வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளுக்கு வீதி ஒழுங்குமுறைகளைப் போதிக்கும் புத்தகங்களை விற்பனைசெய்யவுள்ளனர் இதற்காகப்பெரும் தொகையான வீதிப் போக்குவரத்துப் புத்தகங்கள் வரவழைக்கப்பட்டுள்ளன

[கொ]

## சங்கீத வித்வத் சபையின்

## பண்ணிசைவிழா இன்று நல்லையில் ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கை சங்கீத வித்வத் சபையினரின் பண்ணிசை விழா, இன்று சனிக்கிழமை மாலை நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் ஆரம்பமாகிறது. விழா தொடர்ந்து 23-ந்திகதிவரை நடைபெறும்.

17-ந் திகதி தொடக்கம் இசைத்துறைக்கு அளப்பரிய சேவையாற்றிய சாகித்திய கர்த்தாக்களின் தினங்களாக விழா அமையும். 17ம் திகதி கோபி கிருஷ்ணர் தினமும், 18-ந் திகதி புதன்கிழமை தீக்ஷிதர் தினமும், 19-ந் திகதி வியாழக்கிழமை, ஷியாமா சாஸ்திரிகள் தினமும், 20-ந் திகதி வெள்ளிக்கிழமை முத்துத்தாண்டவர் தினமும், 21-ந் திகதி சனிக்கிழமை சுவாதித்திருநாள் தினமும், 22-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பாபநாசம் சிவன் தினமும், இறுதிநாளான 23-ந் திகதி திங்கட்கிழமை தியாகராஜ சுவாமிகள் தினமுமாக விழா நடைபெறும்.

### இன்றைய நிகழ்ச்சிகள்

இன்றைய நிகழ்ச்சிகள் வருமாறு:-

மாலை 5-00மணி பண்ணிசை ஒலிப்பதிவுகள். 6-00 ஆசியுரை ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் அடிகள். 6-15 வி. சிவஞானம் பாட்டு, எம். சிதம்பரநாதன் மிருதங்கம், 7-30 சொற்பொழிவு பிரம்மஸ்ரீ கே. கைலாசநாதக் குருக்கள்; 7-45 வி. கே. நடராஜா பாட்டு, கே. சித்திவிநாயகம் வயலின். எஸ். மகேந்திரன் மிருதங்கம். 9-00 பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை. நாதஸ்வரம் ஏ. பாலசுப்பிரமணியம் நாதஸ்வரம், கே. கணேசன் தவில், ஆர். குகன் தவில்.

[கெ-அ]

## 'சமூகஒற்றுமையைஏற்படுத்த அரங்குகள் பயன்படவேண்டும்'

— உடுப்பிட்டி எம். பி.

(உடுப்பிட்டி)

"திறந்த வெளி அரங்குகள், கலாச்சார வளர்ச்சிக்காகப் பயன்படுத்த படுவதுடன் நின்றுவிடாது சமூக ஒற்றுமையையும் நிலைநாட்டும் சாதனமாக விளங்க வேண்டும். இவற்றை நிலைநாட்டுவதில் பழைய மாணவர்கள் திறமையுடனும் சித்தையுடனும் செயற்பட வேண்டும்,",

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு த. இராஜலிங்கம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நிறுவப்பட்டுள்ள நவீன திறந்தவெளி அரங்கைத் திறந்து வைத்துப்பேசுகையில் குறிப்பிட்டார்.

மகாவித்தியாலய அதிபர் திரு கே குணரத்தினம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது

உடுப்பிட்டி எம் பி. மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"வடமராட்சியில் இறந்த ஒரு திறந்த வெளிஅரங்கு இதுவரை காலமும் இல்லாமல் இருந்து வந்தது பெருங் குறையாகும். நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் இத்திறந்த வெளி அரங்கை உருவாக்கியமைக்கு இத்தொகுதி எம் பி. என்றமுறையில் நான் பெருமிதமடைகின்றேன்.

"ஒருபாடசாலையின் வளர்ச்சியிலும், அபிவிருத்தியிலும் பழைய மாணவர்களின் பங்கும் பொறுப்பும் முக்கியமானது. கொழும்பு போன்ற நகரப்பகுதிகளில் பழைய மாணவர்கள் தாம் பயின்ற பாடசாலைகளில் மேற்கொண்டு வரும் அபிவிருத்தி வேலைகள் நமக்கு முன்மாதிரியாகவும், வழிகாட்டியாகவும் விளங்குகின்றன" என்றார்.

[அ]

## யாழ். பொலிஸ் அதிபருக்கு பரு. நீதவான் வேண்டுகோள்

[புலோலி]

வல்வெட்டித்துறைப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர் பிடிவிறாந்துக்கு அகப்படாமல் பொலிசாருக்கு "டிமிக்கி" கொடுத்துத் தலைமறைவாகத் திரிகின்றனராம். இதனால் நீதிமன்றத்தில் இவ் வழக்குகள் மீளமீளக்கூப்பிடப்படுவதனால் நீதிமன்றத்திற்குப் பெரும் சிரமம் ஏற்படுவதுடன் நேரமும் வீரணாகின்றதாம். பொலிசாரும் இந்தப்பிடிவிறாந்திற்கு "டிமிக்கி" கொடுக்கும் பேர்வழிகளைக் கைது செய்ய எதுவித நடவடிக்கையும் எடுப்பதாகத்தெரியவில்லையாம். எனவே விசேஷ பொலிஸ் கோஷ்டி ஒன்றை இங்கு அனுப்பி பிடிவிறாந்திற்கு டிமிக்கி கொடுப்போரைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கவேண்டுமென பருத்தித்துறை நீதவான் திரு. கே. ஞானச்சந்திரன் யாழ். மாவட்டப் பொலிஸ் அதிபர் திரு வியோ பெரேராவிற்கு அறிவித்தல் ஒன்றை அனுப்பியுள்ளாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

[அ]

## வட்டமேசை மகாநாடு

[கொழும்பு]

தமிழ்பேசும் மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு அரசு வட்டமேசை மாநாட்டை கூட்டுவதற்கு தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தன தலைமையில் நடந்த சிறுபான்மையினர் விவகாரம் தொடர்பான அமைச்சர்கள் உபகுழுகூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது

சகல அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளிடமிருந்தும் தமிழ் பேசும் மக்களைப் பாதிக்கும் பிரச்னைகள் தொடர்பாக மகஜர்கள் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது

[அ]

## மேலும் 20 வீடுகள்

[சித்தன்கேணி]


வீடமைப்புத் திணைக்களத்தினால் பொன்னாலையில் மேலும் இருபது வீடுகள் அமைப்பதற்கு அடுத்தமாதம் வேலைகள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன. ஏற்கனவே பொன்னாலையில் பதினைந்து வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன.

## சங்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டக் கிராம சேவையாளர் சங்கத்தின் 16-வது வருடாந்தப் பொதுக் கூட்டம், நாளை ஞாயிற்றுக் கிழமை காலை சென். ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (கெ-அ)


## ஆரம்ப வெளிறல் நோய்- வளர்ந்த பின் வெளிறல் நோய்



உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம், கோவாமலர், தக்காளி ஆகியவற்றைப் பாதிக்கும் ஆரம்ப வெளிறல், வளர்ந்த பின் வெளிறல் நோய்களையும் மற்றும் சகல நோய்த் தொல்லைகளையும் கட்டுப்படுத்த

பாவியுங்கள் வொன்டோசெப் - அற்புதமான ரசாயன மருந்து

வழங்குவோர்: ஏ. பவர் அண்ட் கம்பனி லிமிட்டெட்
62 ஜெத்தவன வீதி,
கிராண்ட்பாஸ், கொழும்பு 14

புங்குடுதீவு ப.நோ. கூ. சங்க

# ஊழியர் வேலைநிறுத்தம் வாபஸ்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு ப நோ கூ சங்க ஊழியர்களின் வேலைநிறுத்தம் வாபஸ் பெறப்பட்டு ஊழியர்கள் வேலைக்குத் திரும்பியுள்ளார்கள். சங்கத்தின்புதிய தலைவர் திரு நா தருமலிங்கத்திற்கும். ஊழியர் சங்கத் தலைவர் திரு இ முத்துவேலுக்கும் மற்றும் உயர் அதிகாரிகளுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் ஊழியர்களின் நான்கு அம்சக் கோரிக்கையை ஏற்று உடன் வழங்க நெறியாளர் குழு இணங்கியுள்ளது.

வேலைநிறுத்த சமரச பேச்சுவார்த்தை குறித்து ஊழியர் சங்கத் தலைவர் திரு இ முத்துவேலு வெளியிட்ட அறிக்கை விபரம் வருமாறு;

புங்குடுதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் 4 கோரிக்கைகளை முன்வைத்து கடந்த மாதம் 27-ந் திகதி வேலை நிறுத்தத்தில் குதிக்க இருந்தனர். ஆனால் அன்று நடந்த நெறியாளர் குழுக் கூட்டத்தில் நான்கு பேர் சாதகமாகவும் ஒருவர் [தலைவர்] எதிராகவும் ஊழியர்கள் கோரிக்கைகளை ஏற்று ரூபா 50/ கொடுப்பனவை, செய்வதென்று தீர்மானம் எடுத்தார்கள் ஆனால் தீர்மானங்களை நடைமுறைப்படுத்த தலைவர் இடையூறாகவும் மேலும் ஒரு ஊழியரை பழிவாங்கும் நோக்கத்துடன் 7-7-79ல் கட்டாய லீவில் அனுப்பினார். இதனை எதிர்த்து ஊழியர்கள் கடந்த செவ்வாய்கிழமை முதல் வேலைநிறுத்தத்தில் குதித்தனர். இதனைத் தொடர்ந்து தலைவர் தனது இராஜினாமாவை ஆணையாளருக்குத் தேசிய பேரவை உறுப்பினர் மூலம் அனுப்பினார் 10-7-79ல் புதிய தலைவர் ஆசிரியர் நா தருமலிங்கம் நிர்வாகத்தைப் பொறுப்பேற்று கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு ஞானப்பிரகாசம் முன்னிலையில் பேச்சுவார்த்தைகள் நடாத்தினார்கள். இப்பேச்சுவார்த்தைகளின் போது உதவி ஆணையாளர் திரு ஞானப்பிரகாசம் வடபிராந்திய கூட்டுறவு சம்மேளனக் காரியதரிசி, திரு. இராசேந்திரம், புதிய சங்கத்தலைவர் திரு நா தருமலிங்கம். ஊழியர் சங்கத் தலைவர் இ. முத்துவேலு உபதலைவர் மு. சச்சிதானந்தம் ஆகியோர் கலந்து கொண்டனர். இப்பேச்சு வார்த்தையின் போது கட்டாய லீவில் அனுப்பிய ஊழியரை மீண்டும் சேவைக்கு எடுப்பதெனவும், ரூபா 50/- கொடுப்பனவை உடன் செயல்படுத்துவதெனவும், மற்றைய கோரிக்கைகளையும் ஏற்றுக் கொண்டதின் பேரில் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தை கைவிட்டு உடன் வேலைக்குச் சென்றனர்.''

.(கெ)

## பரிசு பெற்றோர்

(சுழிபுரம்)

வழக்கம்பரை சன சமூக பஜனைச் சபையினர் நடாத்திய அபிராமியந்தாதி மனனப் போட்டியில் இவ்வாண்டு பரிசுபெறுவோர் விபரம் வருமாறு! செல்வன் இ. சிவகுரு, செல்வி ந. பிறேமா, செல்வி இ. சுசீலா. செல்வி இ. இலச்சுமி செல்வி ஞா. மாலினி, செல்வன் மு சுகந்தபர், செல்வி ஜெ விஜியா, செல்வி இ வனஜா, செல்வி க. முத்துக்குமாரசாமி.

“சைவசமயம் போதிப்பவருக்கு

# மூன்று வருடப் பயிற்சி அளிக்குக”

[யாழ்ப்பாணம்]

"பௌத்த சமயத்தினருக்கு சமயம் போதிப்பதற்கு மூன்று வருடப் பயிற்சி அளிப்பது போல சைவசமயம். போதிப்பதற்கும் அத்தகைய மூன்று வருடப் பயிற்சி அளிக்க ஏற்ற ஒழுங்குகள் செய்யப்படவேண்டுமென கல்வி அமைச்சருக்கு ஆலோசனை வழங்கப்படல் வேண்டும்.'

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தின் பதினெட்டாவது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நாவலர் வித்தியாசாலையில் சைவப்புலவர் வ. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற போது இக்கூட்டத்திற்கு திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் இருந்தும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மற்றும் தீர்மானங்கள் வருமாறு:

"சமயக்கல்வி சம்பந்தமான ஆலோசனைகளையும், ஆக்க வேலைகளையும் கல்வி அமைச்சில் இயங்கிவரும் சமயப்பிரிவுக்கு வழங்குதற்குச் இசைவு புலவர்கள் முன்வரவேண்டும்.

"சமயபாட போதனை, சமயப்பரீட்சைகள், பாடத்திட்டம், விடைத்தாழுக்குப் புள்ளியிடுதல் என்பன தயாரிக்கும் குழுவில் கல்வி அமைச்சு முக்கியமாக சைவப்புலவர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும், என கல்வி அமைச்சின் சமயப்பிரிவைக் கேட்டல் வேண்டும்:

"சர்வகலாசாலையில் "இந்து நாகரிகம் கற்பதற்கு' சைவப் புலவர்களையும் அங்கீகரிக்க வேண்டும் என உயர்கல்வி அமைச்சைக் கேட்டல்.

சைவப்புலவர் பரீட்சையை எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் நடாத்துதல.' (கொ-க)

மல்லாகம்

## மாதர் மன்றத்தில் நடன வகுப்புகள்

[மல்லாகம்]

மல்லாகம் மாதர் மன்றம் தையல் வகுப்பு, சிகை அலங்காரம், போன்ற வகுப்புகளுடன் சனி ஞாயிறு தினங்களில் நடன வகுப்புகளையும் நடாத்தவுள்ளது.

இராமநாதன் இசைக் கல்லூரி நடன ஆசிரியை செல்வி சுபத்திரா இரத்தின சபாபதியின் ஆதரவுடன் நடாத்த இருக்கும் இந்நடன வகுப்புக்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இளைப்பாறிய மாவட்ட நீதிபதி திரு. வி. பா. குமாரசாமியால் ஆரம்பித்து வைக்கப்படவிருக்கிறது.

மாதர் மன்றத் தலைவர் திருமதி ப. சபாரத்தினம் இணைச் செயலாளர்கள் திருமதி பா. ஸ்ரீ பாஸ்கரன், திருமதி செ. நடராசா ஆகியோர் இதற்கான ஒழுங்குகளை செய்துள்ளனர்.

## மீனவர் தங்குமடம்

[நெல்லியடி]

பொலிகண்டி, ஆலடியில் அமைக்கப்பட்டுள்ள மீனவர் தங்குமடம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் இக் கட்டிடத்தை திறந்து வைத்தார். [ஈ]

(யாழ்ப்பாணம்)

''ஏறத்தாள 70 லட்சம் பனை மரங்கள் பயன்படுத்தக் கூடியவைகளாக இருந்தும் 4லட்சம் பனை மரங்களே சீவல் தொழிலில் பயன்படுத்தப்படுகின்றன இதுவும் கள்ளுற்பத்திக்கு மட்டுமே செயல்படுகின்றன'.

இவ்வாறு பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் 79ம் ஆண்டிற்கான முயற்சிகள் பற்றி வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது!

வாக்களிக்கப் பெற்ற முழுச் செலவினம் ரூபா 1,500,000 ஆகும். இதில் ரூபா 500 000/- நடைமுறைச் செலவுகளுக்காகவும் மீதி ரூபா 1,000,000 மூலதனச் செலவுகளுக்காகவும் வழங்கப்பட்டுள்ளது.

### அபிவிருத்தி

ரூபா 250,000 அபிவிருத்திக்காக வழங்கப்பட்டுள்ளது

இது கீழ்வரும் பிரதேசங்களில் பயன்படுத்தப்படும் யாழ். மாவட்டம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, அம்பாந்தோட்டை, மொனறாகலை, புத்தளம், அநுராதபுரம்.

கடந்த ஆண்டில் 45 லட்சம் பனம் விதைகள் நடுகைக்காக விநியோகிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் 20லட்சம் விதைகள் விநியோகம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் வருவகாலத்தில் பனை நடுகையில் ஈடுபட விரும்பும் காணிச் சொந்தக்காரர்களிடமிருந்து விபரங்கள் கோரும் பத்திரிகை விளம்பரம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. புத்தளம், மன்னார், வவுனியா பகுதிகளின் அரசாங்க அதிபர்கள் அப்பகுதிகளிலுள்ள எல்லையோரக்காணிகளை சபையின் பனைநடுகைத் திட்டத்திற்கு வழங்கியுதவுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள். இந்நோக்கத்திற்காக இப்பகுதிகளை சபை பரீட்சித்துள்ளது. மன்னார்மாவட்டத்தின் ஒருமுகப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தில் இதுவுமடங்கியுள்ளது யாழ் மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களின் சிரமதானப் பணி மூலமும் காணிச் சீர்திருத்தக் குழுவின் மூலமும் பனம் விதைகள் சேர்க்கப்படவுள்ளன.

பனை நடுகைத்திட்டம் குறைந்தபட்சம் 1983ம் ஆண்டு வரையிலாவது நீடிக்கப்படவுள்ளது இம்முயற்சியின் இலக்கு ஒரு கோடியாகும். இத்துறையில் 1979ம் ஆண்டுக்கான நிதித்தேவை ரூபா 50,000ஆகும். அதன்பின் ஒவ்வோர் ஆண்டும் 100,000 ஆகும், எதிர்வரும் ஆண்டுகளில் சபையின் அதிக வாகனங்கள் சேவையிலீடுபடுத்தப்படும்போது அம்பாந்தோட்டை, மொனறாகலை, அம்பாறை திருகோணமலை போன்ற இடங்களுக்கும் இத்திட்டம் விஸ்தரிக்கப்படவுள்ளது. மட்டக்களப்பிலும் இத்துறையில் முயற்சிகள் விரிவான முறையில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பனைநடுகைத் திட்டத்தை மேற்கொள்ளும் அதேவேளையில் தற்போதுள்ள பனைமரங்களை தறித்து வீழ்த்தும் முயற்சியுக் சட்டரீதியாகத் தடுக்கப்படவுள்ளது.

### பனையும் பயனும்

பனை உற்பத்திப் பொருட்கள் நாலு பிரதான பகுதிகளில் அடங்கும். கள், கருப்பநீர், பனை வெல்லம், சீனி, கல்லக்காரம், ஓலை, நார் உற்பத்திப் பொருட்கள், தும்பு, மரம்.

ஏறத்தாழ 70 லட்சம் பனை மரங்கள் பயன் படுத்தக்கூடியவையாக இருந்தும் 4 லட்சம் பனைமரங்களே சீவல்தொழிலில் பயன்படுத்தப்படுகின்றன. இதுவும் கள்ளுற்பத்தி மட்டுமே செய்யப்படுகின்றது. கள்ளுற்பத்தி விற்பனவுகளில் கூட்டுறவுச்சங்கங்களே ஈடுபட்டுள்ளன. சபை இந்த ஏற்பாட்டை குழப்பாதபோதும் உற்பத்தி பொருட்களின் தரச்

எழு

சிறப்புக்காகவும், ...
...ளர்களின் நியாய...
...மானத்தை உறுதிப்...
...தற்காகவும் பின்...
சபையின் தலையிடு...
கூடும்?

இறக்குமதி செய்...
சீனியின் தரத்தோடு...
யோடும் போட்டியிட...
மையால் பனைவெல்...
என்பனவற்றின் ...
பொருளாதார ரீதியி...
கரமானதாகவில்லை. ...
கூட்டுறவுச் சங்...
இவற்றை கைவிட்டுவி...

கல்லைப் போத்தலி...
ளும் தொழிலில் ச...
ஆரம்பிக்கப்பட்டு தே...
ஊழியர்களும் சபையி...
கப்பட்டுள்ளார்கள்.
எனவே இத்துறையி...
15,000 லாபம் பெற...
லதோடு போகமற்றக...
விநியோகிக்கப்படுவத...
35,000 போத்...
கையிருப்பிலுள்ளது. ...
கப்பட்டதிலிருந்து ...
அளவு பெரும்பாலும் ...
மடங்காகக்கப் பட்டு ...




INTASEL




# சிறந்த அறுவடையை உறுதி செய்ய லோஸ்பான்®

உறுதியாகச் செயலாற்றும், பரந்த செறிவுள்ள இந்தப் பூச்சிக் கொல்லி,
நெல், பருத்தி, புகையிலை, மிளகாய், வெங்காயம், காய்கறிகள் ஆகிய பெறுமதிமிக்க பயிர்களை இலை, தண்டு மூலம் அல்லது மண்ணிலிருந்து தாக்கும் பூச்சிகளிலிருந்து பாதுகாக்க மீண்டுங்கிடைக்கிறது.



லோஸ்பான் நெற் பயிரைத் தாக்கும் தண்டுப் பூழுவை அழிப்பதற்கும், ஒழிப்பதற்கே கடினமான வெங்காயப் பயிரைத் தாக்கும் ஸ்போடோப்ரெரு எக்ஸிகுவா பூச்சியை அழிப்பதற்கும் சாலச் சிறந்தது.



எல்லா விதப் பூச்சி வகைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெற்றுக் கொள்ள வகை, வகையான மருந்துகளில் நீங்கள் தங்கியிருக்க வேண்டியதில்லை – அவை, எல்லாவற்றையும் லோஸ்பான் கொல்லுகிறது... நேரடியாக்கப்பட்டும், உட்புகுந்தும், ஆவியாகப் பரந்தும் செயலாற்றுகிறது.

இரசாயனப்பிரிவு,
மஹாராஜா ஓர்கனைசேசன் லிட்.
54, பாங்கஷோல் வீதி, கொழும்பு – 11.
தொலைபேசி: 23603.

டவ்கெமிக்கல் ஸ்தாபனத்தின்
(அ. அ. நா.) வர்த்தகச் சின்னம்

# எழுபது லட்சம் பனைமரங்களில்

## நான்கு லட்சமே பயன்படுத்தப்படுகின்றன!

### பனம்பொருள் அபிவிருத்தி சபை தரும் தகவல்

...ாகவும், தொழிலா... நிரமமான ஒரு ... உறுதிப்படுத்துவ... பின்னுருபோது ... தலையிடு ஏற்படக்

...தி செய்யப்படும் ... தரத்தோடும், விலை ... போட்டியிட முடியா ... பனைவெல்லம், சீனி ... றத்தை உற்பத்தி ... தார ரீதியில் லாப ... ாகவில்லை. இதனால் ... ச் சங்கங்கள் ... கைவிட்டுள்ளன.

... போத்தலில் அடைக் ... றிலில் சங்கங்களில் ... ப்பட்டு தேவையான ... ளும் சபையில் சேர்க் ... னர்கள். ஏற் ... இத்துறையில் ரூபா ... ாபம் பெறப்பட்டுள் ... போகமற்ற காலத்தில் ... சேட்டுவதற்காக ... போத்தல்கள் ... இலுள்ளது. ஆரம்பிக் ... லிருந்து உற்பத்தி ... ரும்பாலும் இரு ... கப்பட்டுள்ளது.

எனினும் போத்தல் தட்டுப்பாடும் விற்பனையாளர் குறைவும் உற்பத்தி அதிகரிப்புக்குத் தடைகளாக உள்ளன. வவனியாவில் ஒரு விற்பனையாளர் நியமிக்கப்பட்டுள்ளார். விற்பனையாளர்களை நியமிப்பதற்காக பத்திரிகை விளம்பரம் அளிக்கப்பட்டுள்ள போதிலும் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. எனினும் மேலும் முயற்சி செய்யப்படுகின்றது. மிலர்ஸ் ஸ்தாபனத்துடனும் இதுசம்பந்தமாக பேச்சுவார்த்தை நடைபெற்றது.

போத்தல்கள் பெறுவதற்காக கேள்விகள் கோரப்பட்டுள்ளன. அடுத்த போகத்தில் எல்லாப் பிரதான நகரங்களிலும் போத்தலில் அடைக்கப்பெற்ற கள் விநியோகம் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

பதனீர் உற்பத்தி பெருமளவு பின்தங்கியுள்ளது. இதை இப்போகத்தில் உற்பத்தி செய்ய தொழிலாளர்களும், தொழில் நுட்ப அறிவுரைகளும் நடைகளாக உள்ளன. போத்தல் தட்டுப்பாடும் உள்ளது. போக முடிவிற்குள் எப்படியும் இதனை அறிமுகப்படுத்துதல் கூடும். அடுத்த போகத்தில் குறைந்த பட்சம் 10 லட்சம் போத்தல் பதனீராவது உற்பத்திசெய்யத் திர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்விரு பானங்களும் உற்பத்தி அளவு அதிகரிக்கப்படும் சந்தைத்தரமும், பாவனையாளர்களின் சுருத்துகளும் அறியப்பட்டு வேண்டிய முன்னேற்றங்கள் செய்யப்படவுள்ளன. மாவட்ட அபிவிருத்தி சபையிடமிருந்து தொழிற்கூடமும் உபகரணங்களும் போத்தல்களும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள போதிலும் இங்குள்ள உபகரணங்கள் பழையவையாகவும் திருத்தப்பட வேண்டியவையாகவும் உள்ளன. மேலும் இத்துறையில் சபை ... திரட்டியுள்ள தொழிற்கூடம் அமைக்கப்பட வேண்டும் இதற்கான மூலதனச் செலவு ரூபா 435,000 ஆகவும் வருடாந்தச் செலவு ரூபா 600,000 ஆகவும் இருக்குமென கணக்கிடப்பட்டுள்ளது. ஆண்டொன்றுக்கு லாபமாக ரூபா 100,000 பெறக்கூடியதாகவும் 500 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கக் கூடியதாகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

#### பனைவெல்லம், சீனி, கல்லக்காரம்

பொருளாதார ரீதியில் லாபகரமற்றவையாக வெல்ல உற்பத்தியை தெங்கு பனம்பொருள் சங்கங்கள் கைவிட்டுள்ளன. மீண்டும் இதைத் தொடர்ந்து சமர்த்தமாக தீர்மானிக்கப்படவில்லை. உற்பத்தி செய்யப்படும் பனைவெல்லத்தை உத்தரவாதவிலையில் கொள்வனவு செய்ய உணவு ஆணையாளர் முன்வருமாறு கேட்கப்பட்டுள்ளது. அத்தோடு அடுத்த ஆண்டில் மலேசியா, சிங்கப்பூர், மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இப்பொருட்களைச் சந்தைப்படுத்துவதுபற்றியும் ஆராயப்படும்.

#### பனைஓலை, நார் கைப்பணிப் பொருட்கள்

இக்கைப்பணித்துறை ஒழுங்காக விருத்திசெய்யப்பட்டிருக்கவில்லை. பொருட்களின் தரக்குறைவும் பழைய பாணிகளும் இன்றைய பாவனையாளர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் அமைந்திருக்கவில்லை. இக்குறைபாடுகளால் பெரும் ஓடர்களைப் பொறுப்பேற்க முடியாமல் இருந்தது. வழமையான பாவனைப் பொருட்களைத் தவிர தேயிலைப் பெட்டி, மேசைத் தடுக்குகள் தொப்பி வேறு அலங்காரப் பொருட்களை ஒரே சீராகவும் தரமுள்ளதாகவும் செய்விப்பது சிரமமாக இருந்தது. இக்குறைகள் களையப்படும் நோக்கத்தோடு இத்துறையில் சிறந்தவர்களின் விபரங்கள் பெறப்பட்டு திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. இவர்களின் உற்பத்தி பொருட்கள் பாவனையாளர்களைப் பெரிதும் திருப்திப்படுத்தக்கூடியவையாக உள்ளன.

பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 30 மாணவிகளைக் கொண்ட முதல் அணிக்கு மூன்றுமாத காலத்திற்கான பயிற்சி தற்போது அளிக்கப்பட்டு வருகின்றது. இப்பயிற்சி முடிவடையான

[8ம் பக்கம் பார்க்க]

## நல்லை உற்சவம்

[யாழ்ப்பாணம்]

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 29ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது

தேர்த்திருவிழா அடுத்த மாதம் 21ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

[செ-அ]

## புதிய நிர்வாகிகள்

[ஊரெழு]

வலிகிழக்கு தென்பகுதி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் ஊரெழு கிளையின் விசேட கூட்டம் இயக்குநர் சபைத் தலைவர் திரு வ நடேசலிங்கம் பொதுமுகாமையாளர் திரு ந. உமாபசுபதி ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற போது பின்வரும் உத்தியோகத்தர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு மு. வீரசிங்கம், உபதலைவர்: திரு. அ. கலைசூரியர். செயலாளர்: திரு ந. கணேஸ். ஏனைய உறுப்பினர்கள்: திருவாளர்கள் கு பரமராசா ஏ. மகேந்திரன் வ தவராசா, இ. சண்முகதாஸ், இ தங்கராசா, ப. மகேந்திரம்.



ஈகோன் 33 (5-10) 54.90
ஈகோன் 34 (5-10) 54.90
ஈகோன் 35 (5-10) 54.90

பாதணிகளில் எழிலினைப்பற்றி
கேள்வி எழுகையில் எம்மை
மிஞ்சுவது கடினம். எழிலை மிகு
செருப்புக்கள் சப்பால்கள்
தயாரிப்பதற்கு எவை காரணங்கள்
என்பதனை அறிந்து கொள்ளும்
அளவுக்கு பாதணிக்கலையில்
பல்லாண்டு பங்கு கொண்டவர்கள்
நாங்கள்.
ஈகோன் இலங்கையில் தயாரிக்கப்பட்ட
இலகுமிகு எழில் நிறைந்த
பாதணிகளில் முதன்மையானது.
மெத்தென்ற தோல் லைனிங்,
அசல் தோல் உட்பாதம், நவீனக்கலவை
அடித்தளம் என்பன ஈகோனை
தரம்மிகு அனுயாச சௌகர்யம் அளிக்கும்
பாதணியாக்குகிறது.

தரம்
அனுயாச சௌகர்யம்
ஈகோன்
ஆடவர்க்கான
செருப்புக்களும்
சப்பால்களும்

ஈகோன் சப்பால்கள்
செருப்புக்கள் பல உன்னத
டிசைன்களில் விற்பனையாகின்றன
நவநாகரிக பாதணிகள் என்று கூறு
கையில் நாம்தான் அவற்றில்
நிபுணர்கள்.

பாட்டா



Grant KB E1014

★ இருபத்தொரு மாத 'வயது'ள்ள

# ஜனதா அரசு 'உயிர்' தப்புமா?

## நாளை மறுதினம் வாக்கெடுப்பு

(புதுடில்லி)

நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீது நாளை மறு தினம் நடைபெறும் வாக்கெடுப்பில் இருபத்தொரு மாத 'வயது'ள்ள ஜனதா அரசாங்கம் 'உயிர்' பிழைக்குமா?

அடுத்தடுத்து நடைபெறும் ஜனதா எம் பிக்களின் கட்சி மாறல்களும், மூன்று அமைச்சர்களின் ராஜினாமாவும் ஜனதா அரசாங்கம் தப்பிப் பிழைப்பதில் பெரும் சந்தேகத்தைக் கிளப்பிவிட்டுள்ளது என்று அரசியல் அவதானிகள் கருத்துவெளியிட்டுள்ளனர்.

தமது கட்சி அங்கத்தவர்களின் ராஜினாமாவைக் கூட பிரதிப் பிரதமர் சரண்சிங் தடுக்க முன்வராததால், ஜனதா அரசு வீழும் பட்சத்தில் சரண்சிங் தலைமையில் கூட்டரசாங்கம் அமைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### அ. இ. அ. தி. மு. க. கம்யூனிஸ்ட் நிலை

பெரும்பான்மை பலத்தை இழந்திருக்கும் ஜனதா அரசு எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறும் வாக்கெடுப்பில் வெற்றிபெறுவதற்கு அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் [18 லோக சபை அங்கத்தவர்கள்] மார்க்சிய கம்யூனிஸ்ட் [22 அங்கத்தவர்கள்] சிக்கிம் ஜனாலித் தளம் (03 அங்கத்தவர்கள்) ஆகிய மூன்று கட்சிகளின் பூரண ஆதரவு தேவை.

தமிழக முதலமைச்சர் திரு எம் ஜி ராமச்சந்திரன் இன்று புதுடில்லி வருகின்றார். திங்கட்கிழமை நடைபெறும் வாக்கெடுப்பில் அரசுக்கு ஆதரவாக வாக்களிப்பதா இல்லையா என்பது குறித்து இன்று முடிவுசெய்யப்படும்.

மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி இன்று கூடி இறுதி முடிவெடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### இந்திராகாந்தி கருத்து

திருமதி இந்திராகாந்தி நேற்று கருத்துத் தெரிவிக்கையில், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது நடைபெறும் வாக்கெடுப்பில் அரசு தோல்விபெறும் என்றும் திரு. சரண்சிங் தலைமையில் அமைக்கப்படும் கூட்டரசாங்கத்தை தாம் ஆதரிப்பதாகவும் கூறியுள்ளார்.

### 21 மாத ஆட்சி

ஜனதா அரசாங்கம் 1977ம் ஆண்டு மார்ச் மாதம், எண்பத்து மூன்று வயது பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் தலைமையில் அமைக்கப்பட்டது.

அரசுமீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்க்கட்சித் தலைவர் திரு. வை. பி சவான் தாக்கல்செய்திருந்தார். இத்தீர்மானம் மீது பதினைந்து மணிநேர விவாதம் நடைபெறும் என்று சபாநாயகர் அறிவித்திருந்தார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இந்திரா காங்கிரஸ் ஆதரித்துள்ளது.

இந்திரா காங்கிரஸை ஆதரிக்கும் அ இ அ தி மு கழகம் வாக்கெடுப்பில் ஜனதா அரசை ஆதரிக்குமா எதிர்க்குமா என்பது இன்று தெரியும்.

### பூகம்பம்: 41 பேர் பலி!

[பீகிங்]

சீனாவின் தென்பகுதியில் இடம்பெற்ற பூகம்பத்தினால் 41 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் 2000 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### எண்ணெய்த் தடை

[திரிப்போலி]

அமெரிக்காவுக்கு எண்ணை அனுப்புவதை நிறுத்திக்கொள்ளப் போவதாக லிபியா அதிபர் கேர்ணல் கடாபி அறிவித்துள்ளார்.

### நிக்ஸன்-ஷா சந்திப்பு

[வாஷிங்டன்]

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி றிச்சார்ட் நிக்ஸன் இன்று ஈரானிய முன்னாள் மன்னர் ஷாவைச் சந்திப்பார்.

முன்னாள் அமெரிக்க ராஜாங்க அமைச்சர் டாக்டர் ஹென்றி கிஸிங்கரும் ஷாவைச் சந்தித்துள்ளார்.

### விரைவு

[வாஷிங்டன்]

ஆஸ்திரேலியாவுக்கு அண்மையில் விழுந்துள்ள ஸ்கைலாப் துண்டுகளைக் கண்டெடுக்கும் பொருட்டு அமெரிக்க நிபுணர்கள் குழுவொன்று அங்கு விரைந்துள்ளது.

### 'சல்யூட்' விழாது

[லண்டன்]

பூமியிலிருந்து ஐநூறு மைல் உயரத்தில் உலகை வலம்வந்து கொண்டிருக்கும் சோவியத் விண்வெளிக் கப்பலான "சல்யூட்-6" அடுத்த மாதம் பூமியில் விழும் என்று அமெரிக்க விஞ்ஞானிகள் அறிவித்துள்ளபோதிலும், அது விழமாட்டாது என்று சோவியத் விஞ்ஞானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

### புதுச்சேரி தேர்தல்

[சென்னை]

அடுத்தமாதம் நடைபெறவிருக்கும் பாண்டிச்சேரி பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கு கூட்டுமுன்னணியொன்றை தி. மு. க. அமைத்துள்ளது.


# சாதாரண பெயருமல்ல
# சாதாரண சுவையுமல்ல




விவா சாதாரண
மோல்டட் பாலுமல்ல

MASTERS

இறக்குமதியும் வினியோகமும்: db DARLEY BUTLER

கொட்டகை நிறைந்த 5-வது வாரம்
REGAL Daily at 2-00. 4-30, 7-00 & 9-30 p. m. only
(Jaffna) Saturday & Sunday at 10-30 a,m;
URSULA ANDRESS
in
Mountain In The Jungle
Color — Scope — Adults
சிறுவர்கள் பெற்றோருடன் வந்தால் அனுமதிக்கப்படுவர்.

சில தினங்கள் மட்டும்
வின்சர் (யாழ்ப்பாணம்) போன்: 466
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-00, 6-00, 9-30
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-30, 6-30, & 9-45.
கே. பி. சுந்தராம்பாள் நடித்த
ஒளவையார்

லிடோ (யாழ். நகர்) போன் 7693 தினசரி 4 காட்சிகள்
கல்யாணபரிசு
(புதிய பிரதி)

90வது தினம். (கடைசி சில தினங்கள் மட்டும்)
ராஜா (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா நடித்த
ஒளிவிளக்கு
புதிய பிரதி ஈஸ்மன்கலர்

மனோகரா (யாழ். நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
விஜயகுமார்-ஜெயசித்ரா-நாகேஷ் தேவரின்
தாயில்லா குழந்தை
17-7-79 முதல் நீ ஒரு மகராணி

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
நாகேஷ்-கல்பனா நடித்த
சாது மிரண்டால்
(புத்தம் புதிய பிரதி)

4-வது வாரம்
ராணி (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்., லதா, சந்திரகலா, மஞ்சுளா நடித்த
உலகம் சுற்றும் வாலிபன்
கொட்டகை நிறைந்த காட்சி:

A Grand Release! Daily 5 Shows
SHANTHI JAFFNA Phone: 7642
10-30, 2-30, 4-45, 7-00 & 9-30 P. M.
He didn't want to be a Hero... until the day they pushed him too far.
CHARLES BRONSON
Mr. MAJESTYK-Color
Adults Only - Full of Action Packed Film
Charles Bronson Received the Golden Globe Award in 1972, for the "Worlds Most Popular Actor"
நீங்கள் என்றும் கண்டிராத பரபரப்பையூட்டும் பயங்கரக் கார் ஓட்டங்கள், திகிலூட்டும் துப்பாக்கி வேட்டுகள், மயிர்க்கூச்செறியும் சண்டைக் காட்சிகள் நிறைந்த அற்புத அதிசிறந்த திரை ஓவியம்



தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய உற்சவமூர்த்தி கும்பாபிஷேக வைபவத்தின் போது பிரம்மஸ்ரீ ரகுலேஸ்வரக் குருக்கள் குடமுழுக்குச் செய்வதையும், உற்சவ மூர்த்தியை நிர்மாணம்செய்த திரு. சின்னராசா தம்பதிகள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டபின் கோயில் நிர்வாகசபைத் தலைவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியுடன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## கள் மோசடி அம்பலம்

(உடுப்பிட்டி)

கட்டைவேலி — உடுப்பிட்டி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் திடீர் கண்காணிப்புக் குழுவின் திடீர் வேட்டையில் 72 போத்தல் கள் தவறணையொன்றில் 'அபேஸ்' செய்யப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

பிரஸ்தாப சங்கத் தலைவர் திரு எஸ். ஆறுமுகம், இயக்குநர் திரு த இராஜதுரை, பொது முகாமையாளர் ஆகியோர் திடீர் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டபோதே கரணவாய் மடத்துப் புலம் தவறணையில் இருப்பில் 72 போத்தல் கள் மாயமாக மறைந்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கள் தவறணை முகாமையாளர் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். (அ)

## தற்கொலை

(புலோலி)

நோய்க்குச் சிகிச்சை பெற்றும் நோய்மாறவில்லையே என்ற மனக்கவலையால் மனமுடைந்த இளைஞர் ஒருவர் நஞ்சருந்தி தற்கொலைசெய்து கொண்டாராம்.

வல்வெட்டித்துறை சுப்பர் மடையைச் சேர்ந்த வைரமுத்து செல்வராசா (வயது 32) என்பவரே தற்கொலைசெய்துகொண்டவராவார். வல்வெட்டித்துறை திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. தி. வேலுப்பிள்ளை மரண விசாரணை நடத்தினார். வல்வெட்டித்துறைப் பொலிசார் சாட்சியங்களை ஆஜர்செய்தனர்.

இறந்தவரின் மனைவி சரஸ்வதியின் (வயது 29) சாட்சியத்தையடுத்துத் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (அ)

## "கல்லூரிக்கு நற்பெயர் ஏற்பட

# கல்வியிலும் விளையாட்டிலும் முன்னணியில் திகழ வேண்டும்"

(சங்கானை)

விளையாட்டுப் போட்டிகளில் மட்டும் மாணவர்கள் அக்கறை கொள்ளாது கல்வியிலும் கவனம்செலுத்தவேண்டும் இரண்டினது திறமையும் கூட்டுச் சேர்ந்துதான் மாணவரின் எதிர்காலம் சிறக்கவும் கல்லூரிக்கு நற்பெயர் ஏற்படுத்துவதுமாகும்"

இவ்வாறு வைத்திய கலாநிதி டாக்டர் பத்மநாதன் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் இல்ல விளையாட்டுப் போட்டியிலும் கல்லூரித் தின விழாவிலும் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

கல்லூரி அதிபர் திரு சாறி தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் டாக்டர் பத்மநாதன் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபடுவோரின் உடல் வலிமை யடைவதுமல்லாமல் உள்ளமும் தூய்மையடையும் வெற்றி தோல்வி என்பது சகஜம். தோல்விகண்டவர்கள் தான் பின் வெற்றியீட்டுவது எனவே வெற்றியைக்கண்டு வியப்புகொள்ளவும் தோல்வியைக்கண்டுதுன்புறவும் கூடாது சகிப்புத் தன்மையை[illegible] கொள்ள இதுபோன்ற போட்டிகள் நல்லதோர் வாய்ப்பாகும்.

நான்கு இங்கு கல்விபயின்ற காலத்தில் கட்டிட வசதிகள் இன்றுபோல் இல்லாமலிருந்தாலும் விளையாட்டில் நம் ஈட்டிய வெற்றியின் சான்றுகளை இன்னும் பிரதிபலித்துக் கொண்டிருக்கின்றன

மாணவர்கள் கல்விப்படிப்பு முடித்து எங்கிருந்தாலும் தாம் கல்வி பயின்ற பாடசாலை வளர்ச்சிக்கு ஒ[illegible] தாராளமாக உதவவேண்டும் அதுவே அவர் தமது எதிர்காலச் சந்ததியினருக்குச் செய்யும் நற்பணியாக அமையும்

வெற்றியீட்டியோர்க்கு பிரதமவிருந்தினர் டாக்டர் பத்மநாதன் பரிசில்கள் வழங்கினார். (இ)

## யாழ்ப்பாண வைத்திய சங்க நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வைத்திய சங்கத்தலைவராக டாக்டர் எஸ் எஸ். சேனாதிராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார்

யாழ். வைத்திய சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நடைபெற்றபோது புதுவருட உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

உபதலைவர்களாக டாக்டர் விஜய பசுபதி, டாக்டர் சி. ஜெயராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இணைச் செயலாளர்கள்: டாக்டர் சத்தியநாதன் டாக்டர் எஸ் மகேஸ்வரன், பொருளாளர்: டாக்டர் ஆர் ஜே. புஷ்பநாதன், இணை நூலகர்கள்: டாக்டர் திருமதி எம் நடராசா, டாக்டர் ஆர் கணேசமூர்த்தி. நூலாசிரியர்: டாக்டர் ரி கணேஸ்வரன், கமிட்டி உறுப்பினர்கள்: டாக்டர்கள எஸ் பொன்னம்பலம், யோகுபசுபதி, சி சிபாலசுப்பிரமணியம், எம் ஜெகநாதன், எஸ் ராஜரத்தினம், எஸ் சிவானந்தன், வி பி அமரசிங்கம் (க-அ)

## இன்று இல்லப் போட்டி

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி, செங்குந்தா இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது.

கல்லூரி அதிபர் பிரம்மஸ்ரீ சுவாமிநாதசர்மா தலைமையில் நடைபெறும் இக்கல்லூரி விளையாட்டுப்போட்டிக்கு யாழ் மாநகராட்சி மன்ற ஆணையாளர் திரு சிவஞானம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார் (கா)

## 'பேரின்பமே நிலையான பொருள்'

(புலோலி)

"பேரின்பமே நிலையான பொருள் உயர்ந்தபொருள் இவ்வுயர்ந்த பொருளை ஆன்மாக்கள் அடையவேண்டும் பிறவியின் நோக்கமும் அதுவேதான். இறைமயமான பேரின்பம் ஆரம்பத்தில் சற்றுகசப்பாக இருப்பினும் ஈற்றில்முடிவான நிலையான இன்பத்தைத் தரும்" என்று பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் அதிபர் செல்வி ஆர். ஜே. மாண் தலைமையில் நடைபெற்ற மாணிக்கவாசகர் குருபூசை விழாவிலே உரையாற்றிய பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம பொதுச் செயலாளர் திரு பிர. இரத்தினசபாபதி குறிப்பிட்டார். (அ)

ஜகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி, சாவித்திரி
காத்தவராயன்

வெஸ்லி
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - தேவிகா
நீலவானம்

றியோ (யாழ். நரைமண்டபம்)
மறு அறிவித்தல் வரை காட்சிகள் மட்டும் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளன.
மனேஜர்.

# 70 லட்சம் பனைமரங்களில்....

[5ம் பக்கத் தொடர்ச்சி]

பாவனைப் பொருட்களை மட்டுமன்றி ஓலை, மட்டை, நார், ஈக்கு போன்றவற்றாலான பல்வேறு அலங்கார விநோத பொருட்களையும் பயிற்றி வருகின்றது. பயிற்சி பெறுபவர்களுக்கு நாளொன்றுக்கு ரூபா 5/ கைச்செலவுப்படியாக வழங்கப்பட்டு வருகின்றது.

### ஏனைய மாவட்டங்களிலும்

கிளிநொச்சியிலும் இது போன்ற பயிற்சி நிலையம் ஒன்று தொடங்கப்படவுள்ளது. கிளிநொச்சியையும் சுற்றுப்புறங்களையும் சார்ந்த மாணவிகளுக்கு அங்கு பயிற்சி அளிக்கப்படவுள்ளது. இவர்களுக்கு கைச்செலவுப்படி வழங்கப்படமாட்டாது.

மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபையின் வேண்டுகோட்படி அப்பகுதியிலிருந்து 5 மாணவிகளுக்கு அரிபாலை பயிற்சி நிலையத்தில் உடன் பயிற்சி அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. வவுனியா, மட்டக்களப்பு, திருமலைப்பகுதிகளிலும் இதுபோன்ற பயிற்சி நிலையங்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வெளிநாட்டு ஏற்றுமதிக்கான கைப்பணிப் பொருட்களின் உற்பத்தி அதிகரிக்கப்பட்டு 1983-ம் ஆண்டளவில் பனைஓலை, நார் கைப்பணிப் பொருட்களால் பெறப்படும் வெளிநாட்டுச் செலாவணி ரூபா 1,000,000 ஆக இருக்கும். ஏறத்தாழ 500 பேர் இப்பொருட்களின் உற்பத்தியில் முழுநேரமாக ஈடுபட்டுள்ளார்கள். போதிய வருவாயின்மை காரணமாக அநேகர் பகுதிநேரத் தொழிலாக ஈடுபட்டுள்ளார்கள். இத்தொழில் விரிவுபடுத்தப்பட்டு போதிய பயிற்சி அளிக்கப்பட்டு பெரும் அந்நியச் செலாவணி பெறும் தொழிலாக விரிவு பெறும்போது குறைந்தது 1000 பேராவது இத்தொழிலை முழுநேரத் தொழிலாகச் செய்யும் சந்தர்ப்பம் கிடைக்கும்.

பனை மரங்களைத் தறித்து வீழ்த்துதல் சட்டமூலம் தடைசெய்யப்பட்டு சொந்த வீடு கட்டும் தேவை தவிர்ந்த ஏனைய தேவைகளுக்கு அனுமதிப்பத்திர மூலம் வரி அறவிடும் முறை கொண்டுவரப்படும். ஓர் ஐந்தாண்டுகாலத்தில் இவ்வனுமதிப்பத்திர முறைமூலம் ரூபா 5 லட்சம் வருமானம் பெறக்கூடியதாக இருக்கும்.

### தும்புத்தொழில்

பிரஷ் செய்வதற்குப் பயன்படும் இத் தும்பு வெளிநாட்டிலும் பிரசித்தியாக உள்ளது. மன்னாரிலும் யாழ்ப்பாணத்திலும் போதிய மூலவளமிருந்தபோதும் இத்தொழிலில் ஈடுபடுவோருக்கு போதிய ஊதியகூறுதி இன்மையால் குடிசைத் தொழிலாகவே உள்ளது. வெளிநாட்டுச்சந்தையில் இடம் பிடித்துத் தும்புத் தொழிலுக்கு உத்தரவாதமளிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

பருத்தித்துறைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு துரைரத்தினத்தின் முயற்சியால் பனம்பொருள் ஆய்வுநிலையத்திற்கான நிலம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. பிரதேச அபிவிருத்திச்சபையின் வரவுசெலவுத் திட்டத்தில் இக் கட்டடத்திற்காக ரூபா 3 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கட்டடத்திற்கான மூலவரை படத்தை வரையும்படி கட்டடக் கிற்பி ஒருவர் கேட்கப்பட்டுள்ளார். (கா-அ)

மாவட்ட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ்

# யாழ். இந்துக்கல்லூரிக்கு மட்டும் ஏன் நிதி இல்லை?

## ஜனாதிபதி ஜே. ஆர். ஆச்சரியம்

[கொழும்பு]

மாவட்ட அபிவிருத்தித்திட்டத்தின்கீழ் அரசாங்கம் சகல கல்லூரிகளுக்கும் தேவையான நிதியை வழங்கியுள்ளது. இதேசமயம் 2 ஆயிரத்துக்கும் திகமான மாணவர்கள் கல்வி பயிலும் யாழ் இந்துக்கல்லூரியில் விஞ்ஞான கூடம் அமைப்பதற்கு மட்டும் ஏன் பணம் பெற முடியவில்லை.

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கேள்வி எழுப்பினார்.

கொழும்பு ராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளையின் ஆதரவில் கல்லூரியின் கட்டிடநிதிக்காக நடைபெற்ற கலைவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட திரு. ஜெயவர்த்தன மேலும் பேசுகையில் கூறியதாவது:-

90 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் தேசிய எழுச்சிப் போராட்டம் இடம் பெற்ற காலத்தில் உருவாக்கப்பட்ட யாழ். இந்துக் கல்லூரி மிகப் பழமைவாய்ந்ததும் சகவராலும் நன்கு அறியப்பட்டதும் மிகப் புகழ் வாய்ந்ததாகவும் விளங்கிவருகிறது.

இந்து பௌத்த மதங்களை இந்த நாட்டிலிருந்து அந்நியர்கள் அழிக்க முயற்சி செய்து வந்த காலத்தில் சில இந்து, பௌத்த பெரியார்கள் இது போன்ற கல்லூரிகளையும் மத நிறுவனங்களையும் அமைத்தனர். இப் பெரியோர்களில் தமிழும் சைவமும் தழைத்தோங்கப்பாடுபட்ட ஆறுமுக நாவலர் குறிப்பிடத் தக்கவர்.

### பழமைவாய்ந்த மதங்கள்

இந்துசமயமும் பௌத்தமும் எமது தாய்நாடான இந்தியாவில் தோன்றிய மிகப் பழமை வாய்ந்த மதங்களாகும்.

இவ்விருமதங்களையும் சேர்ந்த தவப் புதல்வர்களான மகாத்மாகாந்தியும் புத்தர் பெருமானும் அஹிம்சையையும் கருணையையும் போதித்தார்.

எனது வாழ்வு இந்த இரு மகான்களினது போதனைகளினூலேயேதிருத்தி அமைக்கப்பட்டது.

யாழ். இந்துக் கல்லூரி பல புகழ் பெற்ற புதல்வர்களை உருவாக்கியது. இவர்கள் கடந்த அரசுகளிலும் எனது அரசிலும் கடமைபுரிகின்றனர். இவர்களில் சட்டமா அதிபர் திரு. சிவா பசுபதியும் ஓய்வு பெற்ற நீதியரசர் திரு. வி. சிவசுப்பிரமணியம் ஆகிய இருவரும் இங்கு எனக்கு அருகில் நிற்கின்றனர்.

இவர்கள் இருவரும் நிதி சேகரிப்பதையிட்டு கவலை அடைகிறேன்.

மாவட்ட அபிவிருத்தித் திட்டங்களின்கீழ் அரசு சகல கல்லூரிகளுக்கும் தேவையான நிதி ஒதுக்கியுள்ளது.

இதேவேளையில் 2 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் கல்விபயிலும் யாழ் இந்துக்கல்லூரியில் விஞ்ஞானகூடம் அமைப்பதற்கு மட்டும் ஏன் பணம்பெற முடியவில்லை என்பது எனக்குத் தெரியவில்லை.

இந்த ஆண்டு முடிவதற்குள் இவ்விஞ்ஞானகூடம் அமைப்பது குறித்த திட்டம்பற்றியும் தேவையான நிதி ஆகியவை பற்றிய விபரங்களையும் திருவாளர்கள் பசுபதியும் சிவசுப்பிரமணியமும் என்னிடம் சமர்ப்பிக்கும்பட்சத்தில் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.

கலைகள் மூலம் பணம் சம்பாதிக்கலாம் என்பது உண்மைதான். ஆனால் அரசிடமிருந்து அதைவிட இலகுவாகப் பணம் பெறலாம்.

அடுத்தமுறை நான் யாழ் இந்துக்கல்லூரியில் உள்ள புதிய விஞ்ஞானகூடத்தில் உங்களைச் சந்திக்கிறேன். [ம-இ]

# யாழ்ப்பாணம் ஆபத்தான இடமென்று கூறப்பட்டது

## இடமாற்றம் பெறும் நீதிபதி கூற்று

[யாழ்ப்பாணம்]

"யாழ்ப்பாணம் ஓர் ஆபத்தான இடம் என்றும் அங்கு ஏராளமான பிரச்னைகளை எதிர்நோக்கவேண்டிவரும் என்றும் நான் இங்கு இடமாற்றம் பெற்றுவரும்போது கூறப்பட்டது. யாழ்ப்பாணத்தை வந்தடைந்தமாத்திரத்தில் அபிப்பிராயம் மாறிவிட்டது."

நீர்கொழும்பு நீதிமன்றத்திற்கு மாற்றலாகிச் செல்லும், யாழ். நீதவான் திரு என். ஏ. திசநாயக்கா தமக்களிக்கப்பட்ட பிரிவுபசாரத்தின்போது மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். நீதிமன்றத்தில் நடந்த இவ்வைபவத்தின்போது திரு. திசநாயக்கா மேலும் கூறியதாவது:-

"யாழ்ப்பாணத்திற்கு வந்ததும் எனது நண்பன் திரு. பரமசிவம்பிள்ளை உட்பட அலுவலர்கள் பலர் வந்து என்னைச் சந்தித்தபோது, என்னைப் போன்று என்னுடன் கூடவந்த உறவினர்களும், யாழ்ப்பாணத்தைப்பற்றி தாம் கொண்டிருந்த அபிப்பிராயத்தை உடனடியாக மாற்றிவிட்டனர்."

"மட்டக்களப்பில் பிறந்ததாலும், ஆரம்பக் கல்வியை அங்கு கற்றதாலும் தமிழ் மக்களுடன் நன்றாகப் பழகும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது."

தமிழ் மக்கள் மிகவும் சிநேக பாவமுடையவர்களென்றும் தமிழ் மக்களுக்கும், சிங்கள மக்களுக்கும் எதுவித வித்தியாசமும் இல்லை என்றுமே நான் எப்போதும் நம்பியுள்ளேன். ஆனால் எனது உறவினர்களோ யாழ்ப்பாணம் வருமிவரை தமிழர்கள்பற்றி வித்தியாசமான கருத்தைக்கொண்டிருந்தனர்.

"நீதிமன்றத்தின் சட்டத்தரணிகளைப் பொறுத்தவரையில் இங்கு பெருத்த எண்ணிக்கைகொண்ட சட்டவாதிகளுடன் கடமையாற்றவும், பல்வேறு வழக்குகள், சட்டம் பற்றிய முடிவுகளை எடுப்பதற்கு ஆற்றல்மிக்க சிரேஷ்ட சட்டத்தரணிகளின் துணையும் கிடைத்தது எனது பாக்கியமென்றே கருதுகிறேன்."

சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பில் தமிழில் பேசிய சட்டத்தரணி ஆர். விஸ்வநாதன் கூறியதாவது:-

நீதிபதி யாழ்ப்பாணத்திற்கு கடமை புரிய வந்தபொழுது சிறிது அச்சத்துடன் வந்ததாக நாங்கள் அறிந்தோம். ஆனால் காலப்போக்கில் எமது மக்களைப்பற்றியும், எங்களைப்பற்றியும் நன்றாக அறிந்துள்ளார். எனவே ஏற்கனவே எம்மைப்பற்றியும் எமது மக்களைப்பற்றியும் கொண்டிருந்த அபிப்பிராயத்தை மாற்றியிருப்பார் என்று நம்புகிறேன். நீதிபதி ஒரு பண்புமிக்கவர்; கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, நீதி, நேர்மை ஆகிய குணங்களைக்கொண்டிருந்தமையால் தமிழ் மக்களின் அன்பையும் நன்மதிப்பையும் சட்டத்தரணிகளின் அன்பையும் நன்மதிப்பையும் அவர் பெற்றுள்ளார்; திருப்திப்படுத்தும் முறையில் நடுநின்ற தீர்ப்பாக இருக்கின்ற காரணத்தால் எல்லோரின் பாராட்டுதலையும் பெற்றுள்ளீர்கள். தங்கள் தீர்ப்புகளில் சட்டஞானம் வீசுகின்றது.

இன்று நாங்கள் ஓர் இக்கட்டான சூழ்நிலையில் இருக்கிறோம். எமது எதிர்காலம் இருள்மயமானதாக இருக்கிறது. இத்தகைய சூழ்நிலையில் தான், நான் இந்த உரையை நிகழ்த்தவேண்டியிருக்கிறது. நீதிபதி திரு. திசநாயக்கா யாழ்ப்பாணத்திலிருந்த இந்தக் குறுகிய காலத்தில் எம்மையும் எமது மக்களையும் நன்றாகப் புரிந்துகொண்டுள்ளார். எமது பண்பையும், உயர் பழக்கங்களையும், பிறரைத் தாமாகப் பேணும் பண்பையும், தாங்கள் கடமையாற்றச் செல்லும் பெரும்பான்மை மக்களிடம் நீதிபதி அவர்கள் எடுத்துக் கூறுவார் என்று நம்புகிறேன். [ஈ]

# நாளை கும்பாபிஷேகம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை கதிர்வேலாயுத சுவாமிகள் கோவில், மகாகும்பாபிஷேக வைபவத்தையொட்டிய இன்றைய நிகழ்ச்சிகள் வருமாறு:-

காலை 7-00 மணி விசேஷ சந்தியனுட்டானம், பஞ்சசுத்தி யாகபூஜை, ஹோமம், தீபாராதனை, வேததிருமுறை பாராயணம், ஆசீர்வாதம்.

மாலை 5-00 மணி விசேஷ சந்தியனுட்டானம், பஞ்சசுத்தி யாகபூஜை, ஆலயசுத்தி, பிம்ப சுத்தி, பீஷாம்பர பந்தனம், பூர்வசந்தானம், விசேட திரவிய ஹோமம், மகாஆசீர்வாதம் ஆகிய கிரியைகள் நடைபெறும்.

நாளை கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. [கெ-இ]

# கூடத்தல்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சென்றபோது ஒட்டுமடச் சந்திக்கு அண்மையில் கார் புரண்டதாம். அடுத்து காரை ஓட்டிவந்தவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரும், கடத்தல் பொருட்களும் யாழ் சுங்க உதவி கலெக்டர் திரு. ஏ. செனிவிரத்தின முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது சந்தேக நபரை யாழ். அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்குமாறு உத்தரவிட்ட கலெக்டர் திங்கள்வரை விசாரணையை ஒத்திவைத்தார். [கெ-இ]

# யாழ். மாவட்ட...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தம்பிராஜனிய எம் பி திரு விஜயக்கோனும் நேற்று ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணஞ்செய்து பதவியேற்றுக்கொண்டார்.

சகல மாவட்டங்களுக்கும் ஏற்கனவே அமைச்சர்கள் நியமனம்பெற்றபோதும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு மட்டும் இப்போதுதான் மாவட்ட அமைச்சர் நியமிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே. (ம-இ)

# கொடியேற்றம்

[யாழ்ப்பாணம்]

புங்குடுதீவு கிழக்கு கண்ணகை அம்மன் கோவில் வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றவைபவத்துடன் ஆரம்பமாகிறது. [கெ]

[லண்டன்]

1985ம் ஆண்டளவில் அரபு நாடுகளில் பத்து லட்சத்துக்கு மதிகமான ஆசியர் தொழில் புரிவார்கள் என்று பிரிட்டிஷ் பொருளாதார நிபுணர் டாக்டர் ஸ்ரேஸ் பேர்க்ஸ் கருத்து வெளியிட்டுள்ளார்.

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை கண்மணி

திருமதி வே. கண்மணி காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை (இளைப்பாறிய மேற்பார்வையாளர், பொதுவேலைகள் திணைக்களம்) யின் அன்பு மனைவியும், இராசமணி, நாகரத்தினம் (பேபி) குணரட்டினம் (குலம் - சட்டத்தரணி ஐக்கிய இராச்சியம்), துரைரட்னம் (துரை - கனடா). சகுந்தலா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நாகேந்திரன் (மின்சாரப்பொறியலாளர், யாழ்ப்பாணம் மாநகரசபை), காலஞ்சென்ற பி. இராசநாயகம் (கணக்காளர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்). ஐயாத்துரை (இளைப்பாறிய புகையிரத அதிபர்) ஆகியோரின் அன்பு மாமியுமாவார். அன்னாரின் பூதவுடல் ஈமைக்கிரியைகளுக்காக ஞாயிறு மாலை 4-00 மணிக்கு நல்லூர் இல. 16, குறுக்கு வீதியில் இருந்து செம்மணி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். 3646

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் சின்னையா

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த இளைப்பாறிய கிராம அதிகாரி ஆறுமுகம் சின்னையா நேற்று மாலை காலமானார். அன்னாரது ஈமைக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும். திருமதி சரஸ்வதி சின்னையா 3049

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கேகேசன்துறை வீதி 68ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு ஜூலை மாதம் 14-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8946/76 The Eelanaadu P B No: 49; Telegrams: Eelanaadu Tel: 889;